5 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயமுத்தூர்.

**O.S.No**.837/2023 (பழைய எண்.1063/2013)

நாள் -05/03/2026

**சாட்சி வா.சா.1 திருமிகு.சத்யநாராயணன் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

1. நான் வாதியாகவே இருந்துதான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இவ்வழக்கை என் தந்தைதான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது தந்தைக்காக வேண்டி சாட்சியமளிக்க நான் நீதிமன்றத்தில் எந்த அனுமதியும் பெறவில்லை என்றால் என் வக்கீலுக்குத்தான் தெரியும். இந்த வழக்கை நடத்த எனது அப்பா அதிகாரப்பத்திரம் கொடுதததுள்ளார் என்றால் வழக்கு பரிமாற்றத்தில் நான் தான் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். எனக்கு இந்த வழக்கு குறித்து நேரடியாக தெரியும். எனது தந்தை எந்த அதிகாரமும் கொடுக்காமல் நீதிமன்ற அனுமதியும் பெறமால் இந்த வழக்கிற்கு 3ம் தரப்பினராகிய நான் என் அப்பாவிற்காக சாட்சியமளிக்க எனக்கு எவ்வித தகுதியுமில்லை என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சிய பிரமாண வாக்குமூலமே ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2. வழக்கில் உரைக்கப்பட்டுள்ள பொருண்மைகள் குறித்தும் வழக்கின் ஆவணங்கள் குறித்தும் மற்றும் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரை குறித்தும் எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். எனது அப்பா புல எண்.421 க்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள SILCIL Metallurgic Ltd., என்ற நிறுவனத்திற்கு எனது தந்தைதான் உரிமையாளர். மேற்கண்ட நிறுவனம் liquidation நடைமுறைகள் இருந்தது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்து எனது தந்தையோ நானோ பிரதிவாதியிடம் கடன்தான் கேட்டோம் என எந்தவொரு ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சீசர் மகஜர் காப்பியை போட்டுள்ளோம்.

3. வெற்றுகடனுறுதி சீட்டுக்களோ வெற்று காசோலைகளோ எதையும் நானோ எனது தந்தையோ பிரதிவாதியிடம் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட பொருண்மைகளை சார்ந்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் B.S., பட்டப்படிப்பை ஆஸ்திரேலியாவில் முடித்தேன். எனது தந்தை B.Sc., படித்துள்ளார். 12.2.2009 அன்று நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போனேனா என்றால் ஆமாம். சார்பதிவாளர்

அலுவலகத்தில் என் அப்பா என்னென்ன ஆவணங்களை ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் கிரைய ஒப்பந்தத்தையும், அதிகார பத்திரத்தையும் ஏற்படுத்திக்கொடுத்தார். அந்த கிரைய ஒப்பந்தமானது வழக்கு சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்டது. அதே சொத்தை பொறுத்து பிரதிவாதியின் தந்தைக்கு அதிகாரப்பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. கிரைய ஒப்பந்தம் மற்றும் அதிகாரப்பத்திரத்தின் சங்கதிகள் எனக்கு அன்றே தெரியும் என்றால் சரிதான்.

4. நான் எப்பொழுது எவ்வளவு கடன் கேட்டதாக சொல்கிறேன் என்றால் 2009ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் 2 கோடி கடன் கேட்டோம். மேற்கண்டவாறு கடன் கேட்டதை நிரூபிக்க எந்தவித சாட்சியங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் ரூ.2 கோடியை ரொக்கமாக பெற்றுக்கொண்டதாக ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்ட போது பிரதிவாதி ரூ.2 கோடியை ரொக்கமாக கொடுத்தார் என்றும் அந்த ரூ2 கோடியை நாங்கள் பெற்றுக்கொண்டு ரூ.30 லட்சத்தை வங்கி கணக்கில் செலுத்த சொல்லி அறிவுறுத்தி ரூ.30 லட்சத்தை நாங்கள் திருப்பிக்கொடுத்து 1ம் பிரதிவாதி வங்கி கணக்கில்வைப்பீடு செய்தார் என்றும் மறுநாள் ரூ. 1 கோடியே 4 இலட்சத்து 50 ஆயிரத்தை பிரதிவாதியிடம் கொடுத்து மீண்டும் எங்கள் வங்கி கணக்கில் வைப்பீடு செய்யச்சொன்னேன் என்றால் சரியல்ல.

5. முதல் நாள் ரூ.30 இலட்சமும் அடுத்த நாள் ரூ. 1 கோடியே 4 இலட்சத்து 50 ஆயிரமும் எனது தந்தையின் வங்கி கணக்கிற்கு வந்ததா இல்லையா என்றால் வந்தது. அது போக மீதமுள்ள தொகை எனது அப்பாவிடம் தான் இருந்தது என்றால் சரியல்ல. இதுநாள் வரையில் கிரைய ஒப்பந்தத்தை எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்பவில்லை என்றால் அந்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டதால் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த கிரைய ஒப்பந்தம் 2010ம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கான இடைபட்ட காலத்தில் அதன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை.

**Sd/P.K.Sivakumar**

**V Additional District Judge,**
**Coimbatore.**